பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 23 நாள் 30.01.2019

**பெருநகர சென்னை மாநகராட்சியில், 2011–12 முதல் 2018–19 வரை 8 ஆண்டுகளில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் 33,300 ஏழைப் பெண்களுக்கு ரூ.133.24 கோடி திருமண நிதியுதவியும், 160.18 கிலோ கிராம் தாலிக்கு தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.**

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கோடம்பாக்கம், அடையாறு மற்றும் தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவியும், தாலிக்கு தங்கமும் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களும், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை அமைச்சர் டாக்டர்.வி.சரோஜா அவர்களும் இன்று (30.01.2019) நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஏழைப் பெண்களின் கல்வித் தகுதியை உயர்த்திடவும், ஏழைப் பெண்களின் இளம் வயது திருமணத்தை தவிர்த்திடவும் மட்டுமில்லாமல் சமுதாயத்தில் ஏழைப் பெண்களுக்கு மரியாதை ஏற்படுத்துவதற்காகவும், தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கப்படும் சிறப்பு திட்டங்களில் ஒன்றான ஏழைப் பெண்களின் திருமணத்திற்காக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டத்தின் மூலம் பத்தாம் வகுப்பு படித்த ஏழைப் பெண்களுக்கு ரூ.25,000/–ம் மற்றும் 4 கிராம் தங்கமும் மற்றும் பட்டம் / பட்டயம் வரை படித்த ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/– மற்றும் 4 கிராம் தங்கமும் 17.05.2011 முதல் வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள். மேலும், 23.05.2016 அன்று 4 கிராம் தாலிக்கு தங்கம் என்பதனை 8 கிராம் தாலிக்கு தங்கமாக உயர்த்தி மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 2018–19ம் நிதியாண்டில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் இன்று (30.01.2019) சாந்தோம் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கோடம்பாக்கம் மற்றும் அடையாறு மண்டலத்திற்குட்பட்ட பத்தாம் வகுப்பு படித்த 159 ஏழைப் பெண்களுக்கு ரூ.25,000/– வீதம் ரூ.39,75,000/– திருமண நிதியுதவி மற்றும் தலா 8 கிராம் வீதம் 1,272 கிராம் தாலிக்கு தங்கமும் மற்றும் பட்டம் / பட்டயம் வரை படித்த 619 ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/– வீதம் ரூ.3,09,50,000/– திருமண நிதியுதவி மற்றும் தலா 8 கிராம் வீதம் 4,952 கிராம் தாலிக்கு தங்கமும், டான் பாஸ்கோ பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட பத்தாம் வகுப்பு படித்த 315 ஏழைப் பெண்களுக்கு ரூ.25,000/– வீதம் ரூ.78,75,000/– திருமண நிதியுதவி மற்றும் தலா 8 கிராம் வீதம் 2,520 கிராம் தாலிக்கு தங்கம் மற்றும் பட்டம் / பட்டயம் வரை படித்த 647 ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/– வீதம் ரூ.3,23,50,000/– திருமண நிதியுதவி மற்றும் தலா 8 கிராம் வீதம் 5,176 கிராம் தாலிக்கு தங்கமும் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச்

சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களும், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை அமைச்சர் டாக்டர்.வி.சரோஜா அவர்களும் வழங்கினார்கள்.

முன்னதாக, 28.01.2019 அன்று பீட்டர்ஸ் மெட்ரிகுலேசன் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 2018–19ம் நிதியாண்டிற்கான மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ், இராயபுரம் மற்றும் திரு.வி.க நகர் மண்டலத்திற்குட்பட்ட பத்தாம் வகுப்பு படித்த 286 ஏழைப் பெண்களுக்கு ரூ.25,000/– வீதம் ரூ.71,50,000/– திருமண நிதியுதவி மற்றும் தலா 8 கிராம் வீதம் 2,288 கிராம் தாலிக்கு தங்கமும் மற்றும் பட்டம் / பட்டயம் வரை படித்த 752 ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/– வீதம் ரூ.3,76,00,000/– திருமண நிதியுதவி மற்றும் தலா 8 கிராம் வீதம் 6,016 கிராம் தாலிக்கு தங்கமும், தி.நகர் சர்.பிட்டி தியாகராய அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அண்ணாநகர் மற்றும் தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட பத்தாம் வகுப்பு படித்த 279 ஏழைப் பெண்களுக்கு ரூ.25,000/– வீதம் ரூ.69,75,000/– திருமண நிதியுதவி மற்றும் தலா 8 கிராம் வீதம் 2,232 கிராம் தாலிக்கு தங்கமும் மற்றும் பட்டம் / பட்டயம் வரை படித்த 807 ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/– வீதம் ரூ.4,03,50,000/– திருமண நிதியுதவி மற்றும் தலா 8 கிராம் வீதம் 6,456 கிராம் தாலிக்கு தங்கமும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் வழங்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஏழைப் பெண்களுக்கு 2011–12ம் நிதியாண்டு முதல் 2017–18ம் நிதியாண்டு வரை பத்தாம் வகுப்பு படித்த 11,414 ஏழைப் பெண்களுக்கு ரூ.25,000/–ம் வீதம் ரூ.28,53,50,000/– திருமண நிதியுதவி மற்றும் தலா 4 கிராம் வீதம் 45,656 கிராம் தாலிக்கு தங்கமும், பட்டம்/பட்டயம் படித்த 15,141 ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/–ம் வீதம் ரூ.75,70,50,000/– திருமண நிதியுதவி மற்றும் தலா 4 கிராம் வீதம் 60,564 கிராம் தாலிக்கு தங்கம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2016–17 நிதியாண்டு முதல் 2017–18ம் நிதியாண்டு வரை திருமண நிதியுதவி மற்றும் உயர்த்தப்பட்ட 8 கிராம் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின்கீழ், பத்தாம் வகுப்பு படித்த 850 ஏழைப் பெண்களுக்கு ரூ.25,000/–ம் வீதம் ரூ.2,12,50,000 திருமண நிதியுதவி மற்றும் தலா 8 கிராம் வீதம் 6,800 கிராம் தாலிக்கு தங்கமும், பட்டம்/பட்டயம் படித்த 2,031 ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/–ம் வீதம் ரூ.10,15,50,000/– திருமண நிதியுதவி மற்றும் தலா 8 கிராம் வீதம் 16,248 கிராம் தாலிக்கு தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில் 2011–12 முதல் 2018–19 வரை 8 ஆண்டுகளில் மொத்தம் 33,300 ஏழைப் பெண்களுக்கு ரூ.133.24 கோடி திருமண நிதியுதவியும், 160.18 கிலோ கிராம் தாலிக்கு தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.டி.ஜி.வெங்கடேஷ் பாபு, திரு.எஸ்.ஆர்.விஜயகுமார், டாக்டர் ஜெ.ஜெயவர்த்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.விருகை வி.என்.ரவி, திரு.ஆர்.நட்ராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**